| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **03/01/2024** | முதல் | **07/01/2024** |
| | அறிக்கை எண் : | **001/ 2024** | வெளியீட்டு நாள் : | | **02/01/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (28.12.2023 முதல் 01.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/12 | 29/12 | 30/12 | 31/12 | 01/01 | தேதி | நாள்-1 03/01 | நாள்-2 04/01 | நாள்-3 05/01 | நாள்-4 06/02 | நாள்-5 07/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 4 | 6 | 6 | 4 |
| 33 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 31 | 31 | 29 | 29 |
| 25 | 23 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 21 | 21 | 20 |
| 5 | 6 | 5 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 4 | 7 | 8 |
| 77 | 83 | 81 | 80 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 65 | 74 | 67 | 58 | 58 | | 70 | 70 | 70 | 70 | 70 |
| 10 | 9 | 7 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 6 | 6 | 6 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 3, 4, 5, 6 மற்றும் 7ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு மிக குறைவான அளவு மழையே எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் மக்காசோளம் மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் அறுவடை பணிகளுக்கு திட்டமிடலாம்.

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தையும் ஒரு ஏக்கருக்கு 5-10 என்ற எண்ணிக்கையில் ஊதா ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து அசுவினி மற்றும் இலைத் துளைப்பான் நடமாட்டத்தையும் கண்காணிக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கொய்யா, பீன்ஸ், கால்நடை.**

**கொய்யா:**
கொய்யாபழப் பயிரில் பழஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் அறிகுறியாக பழ ஈக்களின் புழுக்கள் மற்றும் ஈக்கள் பாதி கணிந்த பழங்களையே தாக்கும். பழத்தின் மீது முட்டையிடுவதற்காக போடப்பட்ட துளைகள் காணப்படும். பழத்திலிருந்து துர்நாற்றம் வீச துவங்கும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்கருக்கு 12 இனக்கவர்ச்சிப் பொறி வீதம் வைக்க வேண்டும். அதாவது 5 லிட்டர் வாளியில் 3 லிட்டர் தண்ணீர், 2 கருவாட்டு துண்டு, 1கிலோ கொட்டமுத்து பிண்ணாக்கு, 50 கிராம் நாட்டு சர்க்கரை, 2 அழுகிய வாழைப்பழம், 2 அன்னாசிப்பழத் துண்டு மற்றும் இவற்றை கலந்து வைக்க வேண்டும்.

**பீன்ஸ்:**
பீன்ஸ் பயிரில் சாம்பல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. நோய் தாக்குதலின் அறிகுறியாக இலையின் மேல்புறத்தில் சிறிய வெண்மையான புள்ளிகள் காணப்படும். தீவிரமாகப் பாதித்த பகுதிகளில் இலைகள் முதிர்ச்சியடைவதற்கு முன்னரே உதிர்ந்துவிடும்.

இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கையாக 10 லிட்டர் தண்ணீருக்கு 60 கிராம் சூடோமோனாஸ் மற்றும் 60 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி உடன் 10மில்லி ஒட்டும்பசை சேர்த்து 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

பாதிப்பு தீவிரமாக இருக்கும் பட்சத்தில், ஒரு ஏக்கருக்கு 100மில்லி என்ற அளவில் டெபுகானசோல் மருந்துடன் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**
இரவு நேர வெப்பநிலை மிகக் குறைந்து காணப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கொட்டைகைகளில் கட்டி வைக்கவும்.

கொட்டகையை சுற்றி சாக்கு பைகளை கொண்டு மறைத்து கட்டவும்.

கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்.